2RTJ

# இரண்டாம் திருப்புதல்தேர்வு - 2014

10 - ஆம் வகுப்பு

## தமிழ் முதல் தாள்

காலம் : 2 .30 மணி (செய்யுள், உரைநடை) மதிப்பெண்கள் : 100

அறிவுரை : அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப்பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

குறிப்பு : 1. இவ்வினாத்தாள் ஐந்து பிரிவுகளைக் கொண்டது. 2. விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும். 3. வினா எண் 49-க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

### பிரிவு - I (மதிப்பெண்கள் - 20) பகுதி - 1

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 6 X 1 = 6

1. மாணிக்கவாசகர் கட்டிய கோவில் ...........உள்ளது.
   அ) திருவாதவூர் ஆ) திருப்பெருந்துறை இ) திருநின்றவூர்
2. குடும்ப விளக்கு .......... படைப்புகளுள் ஒன்று.
   அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) சுரதா
3. நற்றிணையைத் தொகுப்பித்தவர் ............. .
   அ) பன்னாடு தந்த மாறன் வழுதி ஆ) உக்கிரப் பெருவழுதி இ) இளம் பெருவழுதி
4. அரசின் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றும் போது நம் சமுதாயத்தில் புரட்சி ஏற்படும் என்றவர்.......
   அ) திரு.வி.க ஆ) பெரியார் இ) பாரதிதாசன்
5. பண்ணொடு தமிழொப்பாய் எனத் தொடங்கும் பாடல் இடம் பெறும் நூல் .......... .
   அ) திருவாசகம் ஆ) திருக்குறள் இ) தேவாரம்
6. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் என்னும் வரிகள் இடம் பெறும் நூல் ........... .
   அ) திருக்குறள் ஆ) கலித்தொகை இ) மணிமேகலை

### பகுதி - 2

**கோடிட்ட இடத்தை நிரப்புக.** 6 X 1 = 6

7. சேக்கிழார் பெருமானின் இயற்பெயர் ............. .
8. அறனீனும் இன்பமும் ஈனும் .......... தீதின்றி வந்த பொருள்.
9. உமறுப் புலவரை ஆதரித்த வள்ளல் .......... .
10. குமரிக்கண்டத்தில் தோன்றிய முதல் மனிதன் பேசிய மொழி .......... .
11. பேச்சு முடிவில் .......... கூறிக் கருத்தினை நிலைநாட்டி முடித்தல் வேண்டும்.
12. நடிப்பாற்றல் மிக்கவரையும் நடிப்பைக் கற்றுத் தருபவரையும் .......... என அழைப்பர்.

### பகுதி - 3

**பொருத்துக.** 4 X 1 = 4

| | | | |
|---|---|---|---|
| 13. | சித்தையர் | - | மூங்கில் |
| 14. | குரிசில் | - | குப்பை கூளம் |
| 15. | பணை | - | கீழானவர் |
| 16. | செத்தை | - | தலைவன் |

### பகுதி - 4

**விடைக்கேற்ற வினா அமைக்க.** 4 X 1 = 4

17. ஓர் இலட்சிய சமூகம் சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது.
18. காந்தியடிகள் பலகோடி மக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரம் கதர் என்று கருதினார்.
19. எல்லா உயிர்களையும் தம்முயிராய்க் கருதித் தொண்டு செய்பவர் உள்ளத்தில் தான். இறைவன் அன்புருவாய் நடம் புரிவான்.
20. தொழில் நுட்பப் பயிலகத்தில் பயில்வோர்க்கு நிறைய வேலை வாய்ப்புகள் உள்ளன.

### பிரிவு - II (மதிப்பெண்கள் : 20) பகுதி - 1

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.** 5 X 2 =10

21. ஊக்கமுடையான் ஒடுக்கம் எதனைப் போன்றது?
22. பழியில்லா மன்னனாய் வாழ்பவனின் பண்புகளாகக் கணிமேதாவியார் குறிப்பிடுவன யாவை?
23. குகனின் வேண்டுகோள் யாது?
24. வந்தவர் வாகீசர் என அறிந்ததும் அப்பூதியடிகள் என்ன செய்தார்?
25. தேவாரம் - பொருள் எழுதுக.
26. வயல்தரும் விளைவுகளாகத் தமிழ்விடுதூது கூறுவன யாவை?
27. அறிவு எனப்படுவது யாது?

### பகுதி - 2

5 X 2 = 10

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.**

28. தொல்காப்பியம் குறித்து முனைவர் எமினோ கூறுவது யாது?
29. திரைப்படச் சுருள் பற்றி நீவிர் அறிவன யாவை?

30. கொடுங்கடலால் கொள்ளப்பட்ட பகுதிகள் யாவை?
31. கண்ணிடந்து அப்பியவர் யார்? அவர் வரலாறு உணர்த்தும் செய்தி யாது?
32. இந்தியாவின் வாழ்வு குறித்துக் காந்தியடிகள் கூறுவது யாது?
33. சத்திய தரும சாலையில் வள்ளலார் செய்த தொண்டு யாது?
34. வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தரும் அமுதசுரபியாக விளங்குபவை யாவை?

பிரிவு - III (மதிப்பெண்கள் : 24) பகுதி - 1

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறுவரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.**

3 X 4 = 12

35. சிலப்பதிகாரம் காட்டும் சோழநாட்டு மன்னர்களின் சிறப்புகள் யாவை?
36. சீதை இலக்குவன் ஆகியோரிடம் குகனைப் பற்றி இராமன் கூறியதென்ன?
37. சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை?
38. நபிகள் நாயகத்தைக் கண்ட புலியின் நிலையை எழுதுக.
39. சாதனைப்பூக்கள் என்று எவற்றை இளந்திரையன் சுட்டுகிறார்?

பகுதி - 2

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறுவரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.**

3 X 4 = 12

40. மணக் கொடை குறித்துப் பெரியார் கூறுவன யாவை?
41. கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்கர் ஆற்றிய பணி யாது?
42. பேச்சினை முடிக்கும் முறைகள் சிலவற்றை எழுதுக.
43. உழவுத் தொழில் குறித்து எழுதுக.
44. காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம் எது? விளக்குக.

பிரிவு - IV (மதிப்பெண்கள் : 10)

45. **கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.** 5

அரியா சனமுனக்கே யானால் உனக்குச்
சரியாரும் உண்டோ தமிழே - விரிவார்
திகழ்பா ஒருநான்குஞ் செய்யுள் வரம் பாகப்
புகழ்பா வினங்கள்மடைப் போக்கா - நிகழவே.

i) இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் யாது?
ii) அரியாசனம் - பொருள் கூறு.
iii) பா ஒரு நான்கு யாவை?
iv) பாவினங்கள் - பிரித்து எழுது.
v) இப்பாடலில் பயின்று வந்துள்ள அடி எதுகைகளை எடுத்தெழுதுக.

46. **கீழ்க்காணும் உரைநடைப் பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.** 5

நம் நாட்டிற்கே உரிய கிராமத் தொழில்களையும் நாட்டுப்புறக் கலைகளையும் வளர்க்க இளைஞர்கள் முன்வர வேண்டும். இந்தியாவின் வாழ்வு என்பது இலட்சக்கணக்கான கிராமங்களின் வாழ்வுதான். அந்தக் கிராமங்களின் வாழ்வு, அந்த நாட்டின் உழவர்கள், இளைஞர்கள் ஆகியோர் கைகளில்தான் உள்ளது என்றார் காந்தியடிகள். தன்னாட்டுப் பொருள் இயக்கமான சுதேசி இயக்கத்தை வளர்க்கும் கடமை இளைஞர்களுக்கே, உரியது என்று கூறினார். வளர்ந்து வரும் வெளிநாட்டவர் பொருள் வரவேற்கத் தக்கதன்று என்று கண்டித்தார்.

i) இளைஞர்கள் எதற்கு முன்வர வேண்டும்?
ii) இந்தியாவின் வாழ்வு என்பது யாது?
iii) கிராமங்களின் வாழ்வு யார் கையில் உள்ளது?
iv) இளைஞர்களின் கடமை யாது?
v) எது வரவேற்கத் தக்கதன்று என்றார் காந்தியடிகள்?

பிரிவு - V (மதிப்பெண்கள் : 26) பகுதி - 1

**கீழ்க்காணும் வினாக்களுக்கு பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.** 2 X 8 = 16

47. (அ) கண்ணகிக்கும் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்கும் நடந்த சொற்போரினை உரையாடலாக அமைத்து எழுதுக. *(அல்லது)*
(ஆ) பெரியாரைத் துணையாகக் கொள்வது குறித்து வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.
48. (அ) திரைப்படம் எடுத்தலுக்குத் தேவையான ஆயத்தப்பணிகளைத் தொகுத்து எழுதுக. *(அல்லது)*
(ஆ) வள்ளலார் ஏற்படுத்திய சமரச சன்மார்க்க சங்கம் குறித்துக் கட்டுரை எழுதுக.

பகுதி - 2

49. **செய்யுள் வடிவில் விடை எழுதுக.** 2 + 2 + 6 = 10

அ) 'நன்றிக்கு' - எனத் தொடங்கும் குறள்.
ஆ) 'பொழுது' - என முடியும் குறள்.
இ) 'நல்லதாய்' -எனத் தொடங்கும் பெரியபுராணப் பாடல்
ஈ) 'இன்று தொட்டிவண்' - எனத் தொடங்கும் சீறாப்புராணப் பாடல்.